DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Spl Sessions Case No. 38-2021**

**Deposition of Witness for Prosecution : P.W.20**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர். நவீன் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 15.10.2025

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்சமயம் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரியில் சட்ட சார்ந்த மருத்துவ துறையில் மூத்த உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 09.09.2021ந் தேதி அன்று பணியிலிருந்தபோத வேதாரண்யம் காவல் நிலைய குற்ற எண் 571/2021 வழக்கில் சம்பந்தப்பட்ட மனோகர் 58 வயது என்ற ஆண் நபரை பிண கூராய்வு செய்ய வேதாரண்யம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள், தலைமை காவலர் திரு. சுரேஷ் அவர்கள் மூலம் பிண கூராய்வு செய்ய விண்ணபப்பம்அனுப்பபட்டது. மேலும் அன்றைய தினம் பிற்பகல் 12.25 மணியளவில் பிண கூராய்வு தொடங்கப்பட்டது. பிண கூராய்வு அறிக்கை பின்வருமாறு

நல்ல உடல் வாகு கொண்ட ஆணின் பிரேதமானது மல்லாந்த நிலையில் காணப்பட்டது. பிண விறைப்பு இரண்டு கால்களிலும் காணப்பட்டது. இறப்புக்கு பின் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு

1. 10x8x2 cm, 10x9x2cm இடது புற கன்னத்தில் கன்றிய காயம் காணப்பட்டது. 3X2x1 cm மேல் மூன்றாம் பகுதியில் இடது புற கழுத்தில் வெளிப்புறமாக கன்றிய காயம் காணப்பட்டது. இடதுபுற தாடை எழும்பு உடைந்தும், அதை சுற்றியுள்ள மென் திசுக்கள் இரத்தம் கசிந்து காணப்பட்டது. மேலும் தலை பகுதியை கூராய்வு செய்து பார்த்ததில், 3x2x2 cm இடதுபுற பின் தலையிலும், 2x1x0.5cm பின் தலையிலும் கன்றிய காயம் காணப்பட்டது. இடதுபுற உச்சந்தலை எலும்பு 2 cm அளவில் உடைந்து காணப்பட்டது. மூளைத்திரை நல்ல நிலையில் காணப்பட்டது. மூளை முழுவதும் இரத்தம் கசிந்து காணப்பட்டது. மண்டையோட்டின் அடிப்பகுதி நல்ல நிலையில் காணப்பட்டது. நாவடி எலும்பு, மூச்சுக்குழாய், இருதயம், மண்ணீரல், இருப்புற சிறுநீரகம், தண்டுவட எலும்பு நல்ல நிலையில் காணப்பட்டது. கல்லீரல் வீங்கி காணப்பட்டது. இரைப்பையில் 50மில்லி பழுப்பு நிற திரவம் காணப்பட்டது. பெருங்குழல் காற்று அடைத்து காணப்பட்டது. சிறுநீர்ப்பையில் 10மில்லி சிறுநீர் காணப்பட்டது. உடல் கூறுகளை சேகரித்து தஞ்சாவூர் இராசாயண பகுப்பாய்விற்கு அனுப்பட்டது. அந்த பகுப்பாய்வில் அவர் மது உட்கொண்டுள்ளார் என்று அந்த அறிக்கையில் கண்டறியப்பட்டது. மேற்கூறிய நபர் விசை மழுங்கிய தாக்கத்தினால் தலையில் ஏற்பட்ட காயத்தினால் இறந்துள்ளார் என்று கருத்து கூறி சான்று வழுங்கினேன். சடல கூராய்வு அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. விசரா அறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் அந்த நபர் சுமார் 24 முதல் 36 மணிநேரம் முன் இறந்திருக்க கூடும். பிண கூராய்விற்கு முன் இறந்திருக்ககூடும் என்று கருத்து கூறி சான்று வழங்கினேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சடல கூராய்வு அறிக்கை கொடுக்கும்போது முன்னாள் வழங்கிய அறிக்கையை படித்த பிறகு சடல கூராய்வு தொடங்கினேன் என்றால் சரிதான். இறந்து போனவருடைய உள்ளூறுப்பு பரிசோதனையை

பார்த்தபோது வயிறு, இரைப்பை, சிறுகுடல், கல்லீரல், சிறுநீரகம், மூளை, இரத்தம் ஆகிய அனைத்திலும் ஆல்கஹால் மது அருந்தியது கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. நான் அவருடைய 06.09.2021ந் தேதியிட்ட வேதாரண்யம் மருத்துவமனையுடைய விபத்து பதிவேட்டை படித்து பார்ததேன். அவர் மருத்துவமனை செல்லும்போதே அவர் சுய நினைவின்றி மது அருந்திய நிலையில் சென்றுள்ளார் என்பதை சான்றின் மூலம் தெரிந்துகொண்டேன். ஒருவர் வேகமாக சைக்கிளில் செல்லும்போது இடத்தை பொறுத்தும், தாக்கத்தை பொறுத்தும் இது ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது.